ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/15 - 2020 ජූලි මස 15 වැනි බදාදා - 2020.07.15

*2184/15 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்**

*3(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் (செஅக சட்டம்) 3(2) ஆம் பிரிவின் நியதிகளின்படி எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கைத்தொழில் ஏற்றுமதி முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரான, பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் இவ்வறிவித்தல் மூலம் -*

*(1) ஓராயிரத்து ஒரு மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொண்ட (ஐ.அ.டொ. 1,001 மில்லியன்) மொத்த முதலீட்டுடன் செக் போர்ட் சிட்டி கலம்போ (பிறைவேட்) லிமிட்டெட்டிலிருந்து கீழ்க்குத்தகைக்கு விடப்பட வேண்டிய ஏறத்தாழ பதினேழு (17) ஏக்கர்களில் (6.8 ஹெக்.) கொழும்பில் போர்ட் சிட்டி வளவுகளில் ஐந்து செங்குத்தான குறிப்படக் கோபுரங்களுடனான கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய (CIFC) கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தைத் தாபிப்பதற்கான கருத்திட்டத்தை மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காகச் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அடையாளங்காண்கின்றேன்.*

*இக்கருத்திட்டமானது, இரு (02) கட்டங்களில் பின்வருமாறு அமுலாக்கப்படும் :*

*கட்டம் 01*

*ஏறத்தாழ 7 ஏக்கர்களைக் கொண்ட மொத்தக் குறித்தொதுக்கப்பட்ட அமைவிட இடப்பரப்பில் 440 மில்லியன் ஐ.அ.டொலர்களைக் கொண்ட முதலீட்டுடன் ஒரு சர்வதேச தரம் - A உயர்நிலை அலுவலகக் கோபுரம், இரு உயர்முனை வதிவிடக் கோபுரங்கள் மற்றும் ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் என்பவற்றைக் கொண்டுள்ளது.*

*கட்டம் 02*

*ஏறத்தாழ 10 ஏக்கர்களைக் கொண்ட மொத்தக் குறித்தொதுக்கப்பட்ட அமைவிட இடப்பரப்பில் 561 மில்லியன் ஐ.அ.டொலர்களைக் கொண்ட முதலீட்டுடன் ஒரு சர்வதேச தரம் - A உயர்நிலை அலுவலகக் கோபுரங்கள், ஒரு சில்லறை நெடுமேடைப் பீடம் என்பவற்றைக் கொண்டுள்ளது.*

*(2)* CIFC *ஆனது, ஒரு குறிப்பட, சுறுசுறுப்பான மற்றும் நடைமுறை அறிவடிப்படையான நிதிசார் மற்றும் வியாபார மையமாகவிருப்பதனால், தமது வியாபாரத்தைக் கொழும்பு போர்ட் சிட்டியில் தாபிப்பதற்கு விரும்பும் இயல்திற முதலீட்டாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் சமூக நன்மையை நாட்டுக்கு வழங்கும்.*

*கொழும்பு போர்ட் சிட்டியில் முதலாவது மைல் கல் செங்குத்தான அபிவிருத்திக் கருத்திட்டமாகவிருப்பதனால்,* CIFC *ஆனது, போர்ட் சிட்டி அபிவிருத்திக்கான உந்துவிசையை வைத்து, கொழும்பு நகரத்தின் நிலத்தோற்றத்தை உருமாற்றும் என்பதுடன் நாட்டினுள்* FDI *உட்பாய்ச்சல்களையும் ஊக்குவிக்கும்.*

CIFC *கலப்புப் பாவனை அபவிருத்திக் கருத்திட்டம், கொழும்பு நகரத்தை ஒரு போட்டியுள்ள வியாபார மையமாக உருவாக்குவதற்கு உதவும் வியாபாரத் தேவைகளை எதிர்கொள்வதற்கென, சர்வதேச நியம "தரம் -* A" *வர்த்தக அலுவலகம், முதனிலைச் சில்லறைக் கடைகள் மற்றும் சொகுசு வதிவு வாழிடக்கூறுகள் என்பவற்றைக் கட்டியெழுப்பி வழங்கும்.*

*1,001 மில்லியன் ஐ.அ. டொலர்களைக் கொண்ட எதிர்வுகூறப்பட்ட முதலீட்டுடனான இக்கருத்திட்டம், சட்ட, கூட்டிணைப்பு நிதி, முதலீட்டு வங்கித் தொழில், சுற்றுலாப் பயணம், ஏற்பாட்டியல் மற்றும்* ICT *துறைகள் என்பவற்றில் பூகோள ரீதியில் பெரும் குழுமங்களை ஊக்குவிப்பதற்கும் கவர்வதற்குமான ஒரு வினையூக்கியாகவிருக்கும் ; இவை, தொழில்நுட்ப வழிவகையறிவைக் கைமாற்றும் அதே வேளையில் நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு உதவுவதுடன் உள்நாட்டு அறிவாற்றலையும் கட்டியெழுப்பும்.*

CIFC *ஆனது, நிர்மாணக் காலப்பகுதியின் போது ஏறத்தாழ 2500 தொழில் வாய்ப்புக்களையும், கருத்திட்டமானது தொழிற்பாட்டைத் தொடங்கியவுடன் 15,000 த்துக்கு மேலான நேரடியான மற்றும் நேரடியாகவல்லாத தொழில் வாய்ப்புக்களையும் தோற்றுவிக்கும்.*

*(3) இலங்கை முதலீட்டுச் சபைக்கும் உடன்படிக்கையைக் கையொப்பமிடு முன்னர் கூட்டிணைக்கப்பட வேண்டிய கருத்திட்டக் கம்பெனிக்குமிடையே கையொப்பமிடப்பட்ட கருத்திட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து எட்டாண்டுகளைக் கொண்ட கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியொன்று இருத்தல் வேண்டும். கருத்திட்ட அமுலாக்கல்/ நிர்மாணம் சொல்லப்பட்ட உடன்படிக்கையிலிருந்து ஓராண்டினுள் தொடங்குதல் வேண்டுமென்பதுடன் எட்டாண்டு "கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியினுள்" வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்குதலும் வேண்டும்.*

*(4) திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் நியதிகளின்படி, மேற்கூறப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களுக்காக, இவ்வறிவித்தலில் அட்டவணை* I *இல் தரப்பட்டுள்ள விலக்களிப்புக்கள் கருத்திட்டக் கம்பெனிக்கு ஏற்புடையனவாதல் வேண்டுமெனக் குறித்துரைத்தல்.*

**அட்டவணை I**

***(1) கூட்டிணைப்பு வருமான வரி***

*"வரிவிலக்களிப்புக் காலப்பகுதி"*

*இலங்கை முதலீட்டுச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வரிமதிப்பீட்டாண்டிலிருந்து கணிக்கப் பட்டது ; பின்வருவனவற்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபங்களின் மீதும் வருமானத்தின் மீதும் வருமான வரி விதித்தல் தொடர்பான 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் :*

(i) *இருப்பிடக் கூறுகளின் விற்பனை நீங்கலாக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து, பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.*

(ii) இருப்பிடக்கூறுகளின் விற்பனையிலிருந்து, ஆறு (06) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

கம்பெனியின் முழுச் செயற்பாடுகளுக்குமான சொல்லப்பட்ட வரிவிலக்களிப்புக் காலப்பகுதி, கம்பெனியானது எந்த ஆண்டில் வரிவிதிக்கப்படற்பாலதான இலாபத்தை ஈட்டுகின்றதோ அந்த ஆண்டிலிருந்து அல்லது கருத்திட்டத்தின் வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்கியதிலிருந்து மூன்றாண்டுகளுக்குப் பின்னர், எது முன்னர் நிகழ்கின்றதோ அதிலிருந்து தொடங்கும்.

"சலுகை முறையிலான காலப்பகுதி"

வரி விடுமுறைக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர், ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) சலுகை முறையிலான வரி வீதம் அல்லது சுற்றுலாப் பயணத்துறைக்கு ஏற்புடையதான கூட்டிணைப்பு வரி வீதத்தின் ஐம்பது சதவீதத்துக்கு (50%) சமமான வீதமொன்று, இருப்பிடக் கூறுகளின் விற்பனை தவிர, பத்து (10) ஆண்டுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபம் மற்றும் வருமானத்தின் மீது ஏற்புடையதாதல் வேண்டும்.

இருப்பிடக்கூறுகளின் விற்பனையிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட இலாபங்களுக்காகவும் வருமானத்துக்காகவும், ஆறு (06) ஆண்டுகளைக் கொண்ட வரிவிடுமுறைக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர் நிலவுகின்ற கூட்டிணைப்பு கூட்டிணைப்பு வரி ஏற்புடையதாகும்.

ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியும் சலுகை முறையிலான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர், கருத்திட்டக் கம்பெனியின் இலாபமும் வருமானமும் தொடர்பிலான வருமான வரி, அப்போதைக்கு வலுவிலுள்ள உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) பங்கிலாப வரி

விலக்களிக்கப்பட்ட இலாபத்திலிருந்து பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபங்கள், பதினைந்து (15) ஆண்டுகளைக் கொண்ட சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியின் போதும் அதன் பின்னர் ஓர் (01) ஆண்டின் போதும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

(3) பிடித்து வைத்தல் வரி

கருத்திட்டக் கம்பெனி, பின்வருவனவற்றின் மீது பிடித்துவைத்தல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :

(அ) முகாமைத்துவக் கட்டணங்களின் மீதும் அரசுரிமைப் பணக் கொடுப்பனவுகளின் மீதும் ; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய விதிப்பனவுகளின் மொத்தம், முழு மொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சுதலாகாது ;

(ஆ) சந்தைப்படுத்தற் கட்டணங்களின் மீது ; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம், முழுமொத்தத் தொழிற்பாட்டு அரசிறையின் ஒன்று தசம் ஐந்து சதவீதத்தை (1.5%) விஞ்சுதலாகாது ;

(இ) ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்களின் மீது ; ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கட்டணங்களின் மொத்தம், முழுமொத்தத் தொழிற்பாட்டு இலாபத்தின் பத்து சதவீதத்தை (10%) விஞ்சுதலாகாது ;

(ஈ) வெளிநாட்டுக் கடன் மீதான வட்டியின் மீதும், மூலதனச் செலவினத்துக்காகப் பெறப்பட்ட தனிசின் மீதும், தொழில்நுட்பக் கட்டணத்தின் மீதும்.

(4) உழைக்கும்போது செலுத்தும் வரி/சொந்த வருமான வரி

கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியின் போது, கொடுக்கப்பட்ட எந்நேரத்திலும் முப்பது (30) அதிகபட்ச எண்ணிக்கை வரையிலான வெளிநாட்டுப் பணியாட்தொகுதியினர், ஏற்புடையதான உழைக்கும்போது செலுத்தும் வரியின் (உபோசெவ)/சொந்த வருமான வரியின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

மேலும், கருத்திட்டக் கம்பெனி, மிகச் சிறந்த முயற்சி என்ற அடிப்படையின் மீது உள்நாட்டு ஊழியர்களின் மூலம் வெளிநாட்டுப் பணியாட்டொகுதியினரைப் படிப்படியாக மாற்றீடு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

பின்வரும் ஊழியர் தொடர்பான பொறுப்புக்களையும் கருத்திட்டக் கம்பெனி பயன்படுத்துவதற்கு உடன்பட்டுக் கொள்ளப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| தேர்ச்சியற்ற தொழிலாளர் தேவைப்பாடு | : | உள்நாட்டில் 75% பெறப்படுதல் வேண்டும் |
| தேர்ச்சிபெற்ற தொழிலாளர் தேவைப்பாடு | : | உள்நாட்டில் 65% பெறப்படுதல் வேண்டும் |
| உயர்நிலை வேலையாளர்கள் | : | உள்நாட்டில் 75% பெறப்படுதல் வேண்டும் (கருத்திட்டக் கம்பெனிக்கு அனுமதியளிக்கப்படின், உயர்நிலை வேலையாளர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் செலுத்தப்படுதல் வேண்டும்.) |

(5) *2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (VAT) சட்டம்*

இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காகத் தேவைப்பட்ட கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் மற்றும் சேவைகளின் எல்லா இறக்குமதிகளும் கருத்திட்டம் தொடர்பான பண்டங்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டுக் கொள்வனவுகளும், எட்டு (08) ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதிக்காகத் திருத்தப்பட்டவாறான 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின்கீழ் சேர்பெறுமதி வரிக் கொடுப்பனவிலிருந்து (VAT) முழுமையாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

VAT விலக்களிப்பானது கம்பெனிக்கான/கருத்திட்டத்துக்கான நேரடி வழங்கல்களுக்கு மட்டுமல்லாமல், VAT சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டு அமதிக்கப்பட்டவாறு கம்பெனிக்கான/கருத்திட்டத்துக்கான வழங்கல்களுக்காக ஒப்பந்தகாரரொருவருக்கு கீழொப்பந்தக்காரரொருவரினால் செய்யப்பட்ட வழங்கல்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

கம்பெனியானது, வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங்குவதன் மீது 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறு வழங்கலின் பெறுமதியின் மீது VAT கொடுப்பனவுக்குப் பொறுப்பாதல் வேண்டும்.

(6) நிர்மாணம் தொடர்பான இனங்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை.- நிர்மாணம் தொடர்பான இனங்களின் எல்லா இறக்குமதிகளும், எட்டு (8) ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட அமுலாக்கற் காலப்பகுதியின் போது கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக, இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிப்படும். பண்டங்கள் கருத்திட்டக் கம்பெனியின் பெயரில் அனுப்பப்படின், கருத்திட்டக் கம்பெனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்படடினுங்சரி அல்லது ஒப்பந்தக்காரர்களினூடாகப் பெறப்படினுஞ்சரி, கருத்திட்டத்துக்காகத் தேவைப்பட்ட நிர்மாணம் தொடர்பான இனங்களின் எல்லா இறக்குமதிகளும், எட்டு (08) ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட அமுலாக்கல் காலப்பகுதியின் போது கருத்திட்டத்தின் நோக்கத்துக்காக (புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இமு சபையினால் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டாவாறு) சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

இணைக்கப்பட்ட எதிமாறான நிரலிலுள்ள இனங்கள், அத்தகைய இனங்கள் ஒன்றில் முழுமையாக இலங்கையில் தயாரிக்கப்படாதிருந்தாலொழிய அல்லது கருத்திட்டப் பூர்த்திக்காகத் தேவைப்பட்ட போதிய தரத்திலும் அளவிலும் மற்றும் கால எல்லைகளினுள்ளும் கிடைக்கக்கூடியனவாக இராதிருந்தாலொழிய, தீர்வையின்றி இறக்குமதி செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்படவும் மாட்டாது.

ஆகவே, பொதுவாக, நிர்மாணம் தொடர்பான பண்டங்களை, அத்தகைய பண்டங்களின் அனுப்புபொருட் பெறுநராகக் கருத்திட்டக் கம்பெனி பெயர் குறிப்பிடப்பட்டால் மட்டுமே, மேலே ஏற்பாடு செய்யப்பட்டவாறு எட்டு (08) ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட அமுலாக்கற் காலப்பகுதியினுள் கருத்திட்டம் தொடர்பில் ஓர் ஒப்பந்தகாரரினூடாக அல்லது கீழொப்பந்தக்காரரினூடாக இறக்குமதி செய்ய முடியும். ஆகையால், அத்தகைய இறக்குமதிகள் வேறெவையேனும் இறக்குமதிகளுடன் சேர்த்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தால்ஈ, இதன்கண் குறிப்பிடப்பட்ட சலுகைகள் கருத்திட்டக் கம்பெனியின் நிர்மாணம் தொடர்பான பண்டங்களுக்கு மட்டுமே

கிடைக்கக்கூடியனவாக இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்குக் கருத்திட்டக் கம்பெனி தனியாகப் பொறுப்பாதல் வேண்டும். அவ்வாறாயின், எக்காரணத்துக்காகவேனும் இந்நிபந்தனை மீறப்பட்டிருப்பின், அந்நேரத்தில் நிலவுகின்ற சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் கீழ் செலுத்தப்படற்பாலனவான வரிகளும் அறவீடுகளும் கருத்திட்டத்துக்கான நிர்மாணம் தொடர்பான பதண்டங்களின் பாகமாகவமையாத எல்லாப் பண்டங்களுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரிகள் உடனடியாகச் சேலுத்தப்படற்பாலனவாக வருதலும் வேண்டும். கருத்திட்டக் கம்பெனியின் எவரேனும் ஊழியரின், ஆலோசகரின் அல்லது வேறெவரேனும் ஆட்களின் தனிப்பட்ட/ சொந்தப் பயன்பாட்டுக்காக் கருத்திட்டக் கம்பெனியினால் இறக்குமதி செய்யப்பட்ட எவையெனும் தனிப்பட்ட பொருட்கள், கருத்திட்டம் தொடர்பான பண்டங்களாகக் கருதப்படுதலாகாதெனக் குறிப்பிடப்படுகின்றது.

(7) துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீடு (PAL)
துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டின் (PAL) கொடுப்பனவும் விதிப்பனவும், எட்டு (8) ஆண்டுகளைக் கொண்ட கருத்திட்ட அமுலாக்கற் காலப்பகுதியின் போது (கம்பெனியினால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டிருப்பினுங்சரி அல்லது ஒப்பந்தகாரர்களினூடாக பெறப்பட்டிருப்பினுஞ்சரி) கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக எல்லா இனங்களின் மீதும் முழுமையாக விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(8) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்

(புதிய சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் இலங்கை முதலீட்டுச் சபையினால் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு) கருத்திட்டம் தொடர்பான இனங்களின் இறக்குமதி, கருத்திட்ட அமுலாக்கற் காலப்பகுதியின் போது ஆயவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**பிரசன்ன ரணதுங்க,**
கைத்தொழில் ஏற்றுமதி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
2020, யூலை 15.

07-834

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.